# போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

## காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்

REDECO

# வேலை வாய்ப்பு

**இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமான காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பதவிக்காக தகுதியை பூர்த்தி செய்திருக்கும் இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

உடற்பயிற்சி ஆலோசகர் - ஒப்பந்த அடிப்படை (ஆண்/ பெண்)

**அடிப்படை தகைமை**

மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் தேசிய தொழில் தகைமை 4ஆவது மட்டத்திற்கு (NVQ Level 04) குறையாத கற்கை ஒன்றை பூர்த்தி செய்து சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

**மற்றும்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் உடற்பயிற்சி ஆலோசகர் ஒருவராக சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**சம்பளம்:** 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய சம்பளம் வழங்கல் செயற்படுத்தப்படும்.

(2026.01.01 ஆம் திகதிக்கு அடிப்படைச் சம்பளம் ரூபா 46,960/= + வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூபா 17,800/=) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவு

**வயதெல்லை:** 18 வயதுக்கு குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு, பதவிக்கு தொடர்புடைய கடமை செயல்திறன் மற்றும் பாதுகாப்பாக மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

தகுதியை பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரர்கள் தமது சுயவிபரக்கோவையுடனான விண்ணப்பம், தொழில் மற்றும் சேவை அனுபவம் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் தம்மை பற்றிய விபரங்களை கேட்டறிய முடியுமான உறவினர் அல்லாத இருவரது பெயர் மற்றும் முகவரிகளுடன் 2026.09.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு தகைமையை பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் மற்றும் குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனம் அல்லது சட்டரீதியான சபை ஒன்றில் தற்போது சேவை புரியும் விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, குறித்த பதவிக்கு தேர்வு செய்யப்பட்டால் அந்தப் பதவியின் வேலையை ஏற்பதற்கு தமது நிறுவனத்தினால் விடுவிக்க முடியும் என்பதை நிறுவன தலைவரினால் உறுதி செய்திருத்தல் வேண்டும்.

**தலைவர்**
**காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்**
**No. 28/10 A, கிரிமண்டல மாவத்தை, நாவல,**
**ராஜகிரிய.**

தலைவர்
காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்
No. 28/10 A, கிரிமண்டல மாவத்தை, நாவல,
ராஜகிரிய